பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
12 07 2025 12 40
சனிக்கிழமை பிற்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இளையோரின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மாநிலங்களுக்கு எவ்வித பாரபட்சமுமின்றி நிதி வழங்கப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க நாம் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றுவோம் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.
- தமிழகத்தில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த 3 சிறுவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.
- ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியின் 20 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

இளையோரின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாடுமுழுவதும் மத்திய அரசு பணிகளில் புதிதாக சேர்க்கப்பட்ட 51 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு காணொலி வாயிலாக பணிநியமன ஆணைகளை வழங்கி அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உந்து சக்தியாக இளையோர் திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் இளையோரின் மேம்பாட்டில் மத்திய அரசு தனி கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இளையோரின் திறனை மேம்படுத்தும் நோக்கில் புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வலிமையான ஜனநாயகத்தை கொண்ட அதிக எண்ணிக்கையில் இளையோரை கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது என்பதை உலகம் ஒப்புக் கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

இன்று ஒரே நாளில் 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளையோருக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டு இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் 47 இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்று பணிநியமன ஆணைகளை வழங்கினர்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் பங்கேற்று பணிநியமன ஆணைகளை வழங்கி பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க நாம் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றுவோம் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - முருகன் - 70 செகண்ட்ஸ்)

>><><><<

மாநில அரசுகளுக்கு எவ்வித பாரபட்சமும் இன்றி மத்திய அரசு நிதியுதவி வழங்கி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், தென்மாநிலங்களுக்கு போதிய நிதி ஒதுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை திட்டவட்டமாக நிராகரித்தார்.

மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கை காரணமாக சர்வதேச அளவில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊழலற்ற நிர்வாகத்தை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

>><><><<

ரயில்வே பணியாளர் தேர்வு முறையில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்வு முறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வது, தொழில்நுட்பத்தை கூடுதலாக பயன்படுத்துவது போன்றவை இதில் அடங்கும் என்று ரயில்வேயின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

விண்ணப்பதாரர்களின் நலனுக்கான பல்வேறு அம்சங்களும் இதில் இடம்பெற்றுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறைகேடுகளை தடுக்கும் வகையில் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

நாடுமுழுவதும் 6 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுச் சேவை மையங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

டிஜிட்டல் இந்தியா இயக்கத்தின் கீழ் இந்த மையங்கள் இயக்கப்பட்டு வருவதாக தகவல் தொழில்நுட்பத் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

நகரப் பகுதி மட்டுமின்றி ஊரகப் பகுதிகளிலும் இந்த சேவை மையங்கள் பொதுமக்களின் வரவேற்பை பெற்றுள்ளன.

>><><><><<

யுனெஸ்கோவின் புராதன சின்னங்கள் பட்டியலில் மராட்டிய பேரரசின் 12 கோட்டைகள் சேர்க்கப்பட்டுள்ளது நாட்டுமக்கள் அனைவருக்கும் பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதில் 11 கோட்டைகள் மகாராஷ்டிராவிலும், ஒரு கோட்டை தமிழகத்திலும் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சிறந்த நிர்வாகம், ராணுவ வலிமை, கலாச்சார பெருமை, சமூக நலன் ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாக மகாராஷ்டிரா பேரரசு திகழ்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

பாரம்பரியமிக்க இந்த கோட்டைகளை நாட்டுமக்கள் அனைவரும் பார்வையிட வேண்டும் என்றும், திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக்கோட்டை இந்த பட்டியலில் இடம்பெற்றது அப்பகுதி மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேஷ் - 44 செகண்ட்ஸ்)

>><><><><<

தமிழகத்தில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த 3 சிறுவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தஞ்சாவூர் மாவட்டம் மருதக்குடி கிராமத்தைச் சேர்ந்த 3 சிறுவர்கள் ஊரணிக் குளத்தில் குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

>><><><><<

ஜார்க்கண்டில் நக்ஸலைட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை பாதுகாப்பு படையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

மேற்கு **Singhbhum** மாவட்டத்திற்கு உட்பட்ட வனப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் நக்ஸலைட்டுகளின் 5 தளங்கள் தகர்க்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அப்பகுதியில் இருந்து ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டையை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

>><><><><<

ஜம்மு கஷ்மீரில் அமர்நாத் யாத்திரையில் பங்கேற்பதற்காக ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட யாத்ரீகர்களை கொண்ட 11 ஆவது குழு இன்று புறப்பட்டுச் சென்றது.

பலத்த பாதுகாப்புடன் 275 வாகனங்கள் மூலம் இந்த குழுக்கள் புறப்பட்டுச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுவரை 1 லட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த யாத்திரையில் பங்கேற்றதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>><><><><<

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 4 தினங்களுக்கு கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அது தெரிவித்துள்ளது.

அசாம், மேகாலயா, சத்தீஷ்கர், கர்நாடகா, குஜராத், இமாச்சலப்பிரதேசம், கேரளா, உத்தரப்பிரதேசம், உத்ராகண்ட் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா, தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் வெயிலின் தாக்கம் சற்று அதிகரிக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியின் 20 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் இந்தியா 4 தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

கிர்கிஸ்தானின் **Bishkek**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 62 கிலோ எடைப்பிரிவில் அஞ்சலியும், 65 கிலோ எடைப்பிரிவில் முஸ்கனும், 72 கிலோ எடைப்பிரிவில் ஹசிதாவும், 77 கிலோ எடைப்பிரிவில் காஜலும் தங்கப்பதக்கம் வென்றார்.

59 கிலோ எடைப்பிரிவில் அசிலேஷா வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்பிரிவில் இந்தியா 7 தங்கம், 1 வெண்கலப் பதக்கம் வென்று ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் கைப்பற்றியது.

>><><><<

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-1,

3-6, 6-1 என்ற செட்கணக்கில் செக்குடியரசின் **Maxin Mrva** -ஐ வென்றார்.

>><><><<

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 5வது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று பர்மிங்காமில் நடைபெறுகிறது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரை இந்தியா 3-1 என்ற ஆட்டக்கணக்கில் கைப்பற்றியுள்ளது.

>><><><<

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று **Bekenhim**-ல் தொடங்குகிறது.

>><><><<